

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2049 டிசம்பர் 27, 2018 புரட்சி 17 முழக்கம் 50 விலை: ரூ.3.00


## பெரியாரைப் பார்த்திடாத இளைஞர் கூட்டம் பெரியாரியலை முன்னெடுக்க உறுதி ஏற்றது

# ஆயிரமாயிரமாய் இளைஞர்கள் அணி வகுத்த கருஞ்சட்டைப் பேரணி குலுங்கியது திருச்சி மாநகர்



டிசம்பர் 23, 2018 அன்று திருச்சி மாநகர் ஒரு வரலாற்றை எழுதியுள்ளது. சுமார் 200 அமைப்புகள் ஓரணியில் திரண்டு - பெரியாரே - தமிழர்களின் - தமிழ்நாட்டின் முதன்மை அடையாளம்; காவிக்கு மறுப்பு - பெரியாரின் கருப்பு என்ற முழக்கத்தோடு பல்லாயிரக்கணக்கில் திருச்சியில் திரண்டார்கள். திரும்புமிடமெல்லாம் கருப்புச் சட்டை. அதிலும் நூற்றுக்கு 90 சதவீதம் பேர் பெரியார் இறப்புக்குப் பின் 10 ஆண்டுகள், 20 ஆண்டுகள் கழித்துப் பிறந்த பெரியாரையேப் பார்த்திடாத இளைஞர்கள்; அவர்களிலும் பலர் பெண்கள்.

தமிழ்நாடு முழுதுமிருந்தும் பல நூறு தனி வாகனங்கள் திருச்சியை நோக்கி வந்தன. பகல் 2 மணியளவில் பேரணி புறப்படும் கே.டி. திரையரங்கு அருகே கருஞ்சட்டைத் தோழர்கள் திரளத் தொடங்கினார்கள். 3.30 மணியளவில் பறை இசை முழங்க பேரணியை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தொடங்கி வைத்தார். ஒவ்வொரு அமைப்பும் தங்கள் கொடிகளின் கீழ் கருஞ்சட்டையோடு மதவெறிக்கு தமிழகத்தில் இடமில்லை; காவிக்கு மறுப்பு பெரியாரின் கருப்பு - தமிழர் விடுதலையை வென்றெடுப்போம்; தமிழ்நாட்டு வளங்களை சுரண்டாதே; ஜாதியற்ற சமூகம் அமைப்போம்; ஆணவப் படுகொலையைத் தடுக்க தனி சட்டமியற்று; எங்கள் நாடு தமிழ்நாடு; இங்கு ஏதடா இந்து நாடு? சங்பரிவார் கும்பலே; வெளியேறு; வருகுது பார் வருகுது பார்; இது ஓட்டுக் கேட்காத பட்டாளம்; பெரியாரின் பட்டாளம் என்ற முழக்கங்கள் விண்ணைப் பிளக்க அணி வகுத்து வந்தனர்.

மாலை 5.30 மணியளவில் திருச்சி உழவர் சந்தை மைதான அரங்கில் பேரணி வந்தடைந்தது. மேடைக்கு எதிரே பல்லாயிரக்கணக்கில் கருஞ் சட்டை இளைஞர்கள் திரண்டு உணர்ச்சி முழக்கங்களை எழுப்பிய காட்சியை வார்த்தைகளில் வர்ணிக்க முடியாது. மக்கள் அதிகார அமைப்பைச் சார்ந்த கோவன் குழுவினரின் புரட்சிகர கலை நிகழ்ச்சிகளுடன் மாநாடு தொடங்கியது. மாநாட்டின் ஏற்பாட்டுக் குழு உறுப்பினர்களில் ஒருவரும், மாநாட்டு ஏற்பாடுகளை பொறுப்பேற்று செயல்பட்டவருமான விடுதலைத் தமிழ்ப் புலிகள் கட்சியின் தலைவர் குடந்தை அரசன் வரவேற்புரை யாற்றினார். “தன்னைப் போன்ற ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்தவர்களுக்கு சுயமரியாதை என்ற அடையாளத்தை வழங்கியவர் பெரியார். பெரியாரின் கைத்தடியே காவியை விரட்டும்” என்று பெருமையுடன் குறிப்பிட்டார்.

மாநாட்டுத் தலைவரும் ஏற்பாட்டுக் குழுவின் உறுப்பினரும் இப்படி ஒரு பேரணி மாநாட்டை நடத்த வேண்டும் என்று கருத்துருவாக்கம் தந்தவர்களில் ஒருவரான தமிழக மக்கள் முன்னணி நிறுவனர் பொழிலன் தனது தலைமை உரையில் “பார்ப்பனியம்-இந்தியம் இரண்டையுமே அழிப்பதில்தான் தமிழர் விடுதலை அடங்கியிருக்கிறது” என்று கூறினார் பெரியார். பா.ஜ.க. ஆட்சி மாற்றத்தில் மட்டுமே இந்துத்துவம் ஒழிந்து விடாது; பார்ப்பனியம் - பிறகு வேறு வடிவில் தன்னுடைய மேலாதிக்கமான இந்துத்துவத்தை நிலைநாட்டிக் கொள்ளும்; அதற்குப் பன்னாட்டு நிறுவனங்கள் துணை நிற்கும் - தமிழ்நாடு தமிழருக்கே என்ற பெரியார் முழக்கத்தை முன்னோக்கி நகர்த்த வேண்டும் அதுவே தீர்வு” என்றார்.

மாநாடு ஏற்பாட்டுக் குழுவில் முக்கியப் பங்காற்றியவரும் கருஞ்சட்டை ஒருங்கிணைப்பை உருவாக்குவதில் முனைப்புக் காட்டியவருமான மே 17 இயக்கத்தைச் சார்ந்த திருமுருகன் காந்தி, “தமிழர் விடுதலைக்கான சமகால அரசியலுக்கு பெரியாரியல் தான் தீர்வுகளை முன் வைக்கிறது; பெரியார் சுட்டிக்காட்டிய பார்ப்பனிய சட்டகமான ‘மனுநீதி தான்’ இன்று அரசியலாகி ‘சூத்திரர்’களின் வாழ்வுரிமை - வளங்களை - ‘எட்டுவழிச் சாலை’ - ‘மீத்தேன்’ - ‘ஹைடிரோ கார்பன்’ என்ற திட்டங்களின் வழியாகப் பறித்துக் கொண்டிருக்கிறது என்று சுட்டிக் காட்டினார். பெரியார் கொள்கைப் பரப்புரைக்கு தடை போடுவதும், பார்ப்பன ராஜாக்கள் தடித்த வார்த்தைகளால் அதிகாரத் திமிரில் பெரியாரிஸ்டுகளைப் பேசுவதும், பெரியார் சிலைகளை அவமதித்தால் எதிர்ப்பே இருக்காது என்று திமிரோடு செயல்பட்டவர்களுக்கும் இங்கே திரண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான கருஞ் சட்டைக் கூட்டம் அதன் சக்தியை வலிமையை உணர்த்தியிருக்கிறது. இனி மிரட்டல் உருட்டல்களால் பெரியாரியலை தமிழ்நாட்டிலிருந்து அகற்றி விடலாம் என்போருக்கு இந்தப் பேரணி ஒரு எச்சரிக்கை” என்றார்.

தொடக்க உரை நிகழ்த்திய தமிழ்ப் புலிகள் கட்சியைச் சார்ந்த நாகை திருவள்ளுவன், “இது பெரியார் வழிகாட்டிய பார்ப்பனரல்லாதார் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் நடக்கும் மாநாடு. ஜாதி ஒழிப்பை, தமிழகச் சுரண்டலை, மதவெறியை எதிர்க்கும் பார்ப்பனரல்லாதார் கருப்புச் சட்டை அடையாளத்துடன் ஒன்றிணைந்து பார்ப்பனிய இந்துத்துவ சக்திகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளோம்” என்று குறிப்பிட்டார். தொடர்ந்து தமிழக மக்கள் புரட்சிக் கழகத்தின் நிறுவனரும் மாநாட்டு ஏற்பாட்டுக் குழு உறுப்பினருமான அரங்க. குணசேகரன் தீர்மானங்களை முன்மொழிந்தார்.

திராவிட இயக்கத்தமிழர் பேரவை நிறுவனர் சுப. வீரபாண்டியன் பேசுகையில், “பெரியார் இயக்கங்கள் இங்கே ஒரே மேடையில் இணைந்திருக்கின்றன. அவைகள் எப்போதும் பிளவுபட்டு நிற்கவில்லை. கிளைகளாகப் பிரிந்து நிற்கின்றன. வேர் - பெரியார்தான்” என்றார். தூத்துக்குடியில் கருஞ்சட்டைப் படை மாநாட்டை வைத்தியநாத அய்யர்கள் தீயிட்டுக் கொளுத்திய வரலாற்றைச் சுட்டிக் காட்டிய சுப. வீரபாண்டியன், இனி அது

4ஆம் பக்கம்

## ஜாதி ஒழிப்பு – தமிழின விடுதலை – மதவெறி எதிர்ப்பை வலியுறுத்திக் குரல் கொடுத்தது கருஞ்சட்டை மாநாடு

# செயல் திசை நோக்கி வெளிச்சம் காட்டும் திருச்சி மாநாட்டுத் தீர்மானங்கள்

திருச்சி பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு தமிழர்களின் அடையாளம் - உரிமைப் பறிப்பு - விடுதலைக்கான இலக்கு நோக்கிய கொள்கை வழியை அடையாளப்படுத்தி தீர்மானங்களை நிறைவேற்றி யுள்ளது.

திருச்சி உழவர் திடலில் 2018 திசம்பர் 23 அன்று பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் சார்பில் நடைபெற்ற தமிழின உரிமை மீட்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:



4. ஒரே மக்கள், ஒரே சட்டம், ஒற்றைப் பண்பாடு, ஒற்றை அடையாளங்கள் என்கிற வகையில் பார்ப்பனிய அதிகார வெறிகொண்டு இயங்குகிற இந்திய அரசு இந்தியாவிற்குள் அடக்கப்பட்டுள்ள பல்வேறு மொழித் தேசங்களின் வரலாற்றையும், பண்பாட்டையும், அடையாளங்களையும் மறுக்கிறது. இந்நிலையில் தமிழ்நாட்டு மக்கள் தங்களின் தேசியஇன அடையாள உரிமையின் கீழ்த் தங்களைத் ‘தமிழர்கள்’ என்றே பதிந்து கொள்வதற்கான வகையில் தமிழக அரசு ஆவன செய்ய வேண்டுமென இம்மாநாடு வலியுறுத்து கிறது.

5. மாநில உரிமைகளை நசுக்குவதற்காகவே ஆங்கிலேயர்களால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ‘ஆளுநர்’ என்கிற அதிகார வடிவம் இன்றும் தொடர்ந்து கொண்டு மொழித் தேசங்களான மாநிலங்களை அடக்குகிற நடைமுறையை இக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது. எனவே ஆளுநர் என்போர் மாநிலங்களுக்குத் தேவையில்லை என இம்மாநாடு தீர்மானித்து எதிர்க்கிறது.

6. தமிழ்நாட்டின் பண்பாட்டையும், வரலாற்றை யும் முற்றும் முழுமையாய் அழித்துப் பார்ப்பனியப் பண்பாட்டை, வரலாற்றைத் திணிக்கிற முயற்சியில் வன்முறைகளைத் தூண்டிப் பல படுகொலைகளையும் நடத்தி வரும் ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்ட அமைப்புகள் தமிழ்நாட்டில் இயங்க தமிழக அரசு தடை செய்திட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

7. தமிழ்நாட்டின் ஊர்ப் பெயர்களைத் தமிழில் மாற்ற வேண்டுமான தமிழக அரசின் அண்மை அறிவிப்பை இம்மாநாடு வரவேற்கிறது. அந்த அறிவிப்பை விரைவில் நடைமுறைப்படுத்துவதோடு, எஞ்சியுள்ள எல்லா ஊர்ப் பெயர்களையும் முழுமையாக மாற்றிட வேண்டும் என்றும், தமிழில் பெயரில்லாத இந்திய, தமிழக அரசுகளின் திட்டங்களின் பெயர்கள், கோயில்கள் மற்றும் நிறுவனப் பெயர்கள் அனைத்தையும் தமிழிலேயே அமைத்திட வேண்டும் என்றும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

8. தமிழ்நாட்டின் கீழடி உள்ளிட்ட பழஞ் சிறப்புகளைக் காக்கும் வகையில், தமிழகத் தொல்லியல் பொருள்களை, வரலாற்று இடங்களை மிகுந்த அக்கறையோடு தமிழக அரசு பாதுகாக்க வேண்டும் என்பதோடு, தமிழ்நாட்டில் இயங்கும் தொல்லியல் ஆய்வுத்துறை என்பது தமிழக அரசின் முழுக் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும் என்றும், அதற்குத் தமிழக மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து போராடி அவற்றை மீட்க வேண்டும் என்றும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

9. தமிழ்நாட்டில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் சாதி ஆணவப் படுகொலையில் ஈடுபடும் சாதி வெறியர்களை இம் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. அப்படியானவர்கள்மீது தமிழக அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதோடு, ஆணவப் படுகொலைகளைத் தடுத்து நிறுத்திட தனிச்சட்டம் இயற்றிட வேண்டும் என்றும் அதற்கென அதுகுறித்த உயர்நீதிமன்ற தீர்ப்பைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் இம் மாநாடு வலியுறுத்துகிறது. மேலும், சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்குத் தனிச் சிறப்புத் திட்டத்தின்வழி கல்வி, வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு அளித்திட வேண்டும் என்றும், அவர்கள் சாதி சமயமற்றவர்கள் என்று பதிந்துகொள்கிறவகையில் அரசு ஆவன செய்ய வேண்டும் என்றும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

10. தமிழ்நாட்டில் உள்ள கோயில்கள், வழிபாட்டுத் தலங்கள் அனைத்திலும் தமிழில் மட்டுமே வழிபாடு இருக்க வேண்டும் என்றும், பிற மொழியினரின் வேண்டுகைக்கு வேண்டுமானால் அவர்களுக்கென அவர்கள் மொழியில் வழிபாடு செய்துகொள்ள வழி அமைக்கலாம் என்றும் வலியுறுத்துவதோடு, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராவதற்கான செயல் திட்டங்களை தமிழக அரசு தொடங்க வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.

11. அறிவியல் பெரிய அளவில் முன்னேறியிருக்கிற இக்காலத்தில் மலக்குழிக்குள் இறங்குவதும், கையால் மலம் அள்ளுவதுமான பணிகளில் மனிதர்களே ஈடுபடும் நிலைக்கு மாற்று வழி முறைகளைக் கண்டறிந்து உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது. மேலும் கல்வி, வேலை வாய்ப்புகள் இடஒதுக்கீட்டு அடிப்படையில் நிறைவு செய்யப்படுவதில் அரசு முழு கவனம் செலுத்துவதோடு, தனியார் துறைகளிலும் இட ஒதுக்கீட்டினை நடைமுறைப்படுத்த வேண்டு மென இம்மாநாடு வலியுறுத்துகிறது.

12. பொதுப்பட ஒத்திசைப் படியலில் (concurrence list) இருக்கிற கல்வித் துறையை மாநிலங்களின் பட்டியலுக்கு உடனே கொண்டுவர வேண்டும் என்றும், அந்த வகையில் தமிழ்நாட்டில் இருக்கிற கல்விக்கூடங்கள் அனைத்தும் தமிழ்நாட்டு அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும், இந்திய அரசின், பிற பன்னாட்டு நிறுவனங்களின் கல்விக் கூடங்கள் தமிழ்நாட்டில் இயங்க முழுமையாகத் தடைசெய்ய வேண்டும் என்றும் மாநாடு வலியுறுத்துகிறது. சித்த மருத்துவம் உள்ளிட்ட அனைத்து மருத்துவக் கல்வியும் தமிழ்நாட்டு அரசின் கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும் - என்பதோடு, கல்விக்கான எந்த வகை இந்தியத் தேர்வுகளையும், ‘நீட்’ உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளையும் தமிழ்நாட்டிலும், பிற அனைத்து மொழித் தேசங்களிலும் தடைசெய்ய வேண்டும் என்றும், அவற்றோடு தொடக்கக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை அனைத்துக் கல்விகளும் தமிழ்நாட்டில் தமிழ்வழிக் கல்வியாகவே இருக்க வேண்டும் என்றும், ஆங்கிலம் உள்ளிட்ட பிற மொழிகளை மொழிப் பாடமாக மட்டுமே பயிலலாம் என்றும் இம் மாநாடு வலியுறுத்துகிறது.

13. தமிழ்நாட்டின் ஆற்று நீர்ப்பாசனப் பரப்பு களுக்குத் தடையாகிற வகையில் ஆந்திரா, கருநாடகா, கேரள அரசுகள் மேகதாது அணை, முல்லைப் பெரியாற்றில் புதிய அணை, பாலாற்றில் புதிய அணை என அணைகள் ஏதும் கட்டக் கூடாது என்றும், தமிழகப் பாசனப் பரப்புகளுக்கு இம்மி அளவும் தொல்லை வருகிறபடியான அனைத்துச் செயல்பாடுகளையும் தமிழக அரசு கடுமையான நடவடிக்கை எடுத்துத் தடுக்க வேண்டும் என்றும் இம் மாநாடு வலியுறுத்து கிறது. மேலும் இந்திய அரசின் அணைகள் பாதுகாப்பு சட்டமுன்வரைவைத் தமிழகம் எதிர்க்க வேண்டும் என்றும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

14. தமிழ்நாட்டில் உள்ள வெளிநாட்டு மற்றும் ரிலையன்சு, டாட்டா உள்ளிட்ட இந்தியப் பெரு முதலாளிகளின் தொழிற்சாலைகளைப் படிப்படியாக நிறுத்தி, அவற்றைத் தமிழக அரசே தமிழக மக்களின் பங்கு முதலீட்டில் நடத்திட முன்வரவேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது. தமிழ்நாட்டு நிலங்களை, சுற்றுச் சூழல்களை நாசப்படுத்துகிற மீத்தேன், ஐட்ரோ கார்பன், நியூட்ரினோ, ஸ்டெர் லைட் மற்றும் அணுமின் நிலையங்களைத் தமிழக அரசு அமைச்சரவை ஒப்புதலோடு சட்டப் பேரவை யில் தீர்மானம் இயற்றிச் சட்டமியற்றிக் கொள்கிற வகையில் முழுமையான முயற்சியில் தடுத்து நிறுத்திட வேண்டும் என இம் மாநாடு வலியுறுத்து கிறது.

15. சென்னை உயர்நீதிமன்றத்தினைத் தமிழ்நாடு உயர்நீதி மன்றம் என மாற்றுவதோடு, தமிழ் நாட்டிற்கான உச்ச நீதிமன்றம் தமிழ்நாட்டிலே அமைந்திட வேண் டுமான வகையில் அமைப்பை ஏற்படுத்தவும், தமிழ்நாடு உயர்நீதிமன்றம், தமிழ்நாடு உச்ச நீதிமன்றங் களில் தமிழே வழக்காடு மொழியாகிறபடியான அமைப்பு முறையைத் தமிழக அரசும், மக்களும், கட்சிகளும், இயக்கங்களும் முன்னின்று போராடி மாற்றவும் வேண்டுமென இம்மாநாடு வலியுறுத்துகிறது.

16. தமிழ்நாட்டு வணிகர்களை நசுக்கும் வகையில் தமிழ்நாட்டிற்குள் நுழைந்திருக்கிற, நுழைய இருக்கிற வெளிநாட்டு, மற்றும் ரிலையன்சு போன்ற இந்தியப் பெரு முதலாளிகளின் வணிக நிறுவனங்கள் தமிழ் நாட்டில் இயங்க வழிவிடக் கூடாது என இம்மாநாடு கட்டாயப்படுத்துகிறது. அதேபோல் வணிகர்களைப் பாதிக்கும் ஜி.எஸ்.டி. உள்ளிட்ட இந்திய அரசின் அனைத்து வரிகளையும் தமிழக அளவில் மறுத்திட வேண்டும் என இம்மாநாடு தீர்மானிக்கிறது.

17. தமிழ்நாட்டின் மின்சார வாரியத்தைத் தனியார் வயப்படுத்தி அதன்மூலம் இந்தியப் பெருமுதலாளிகளும், வெளிநாட்டு நிறுவனங்களும் தமிழகத்தில் முதலீடு செய்து தொழில் நடத்திட திட்டமிடுகின்றன. அதன்மூலம் இதுவரை அளிக்கப்பட்டு வரும் குடிசை வாழ் எளிய மக்களுக்கான இலவய மின்சாரமும், உழவர்களுக்கான வரியிலா (மானிய) மின்சாரம் நிறுத்தப்படும் ஏற்பாடும் உள்ளது. இப்போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

18. அண்மையில் ஏற்பட்ட ‘கஜா’ புயலுக்கும், ஏற்கனவே ஏற்பட்ட இயற்கைப் பேரிடர்களுக்கும் அடிப்படைத் தேவைக்கான இழப்பீட்டைக்கூட இந்திய அரசு தமிழ்நாட்டிற்குக் கொடுக்காமல் வஞ்சித்து வருவதை இம் மாநாடு கண்டிக்கிறது. தமிழ்நாட்டரசு கேட்டுக் கொண்டவகையில் உடனடியாக 15 ஆயிரம் கோடி உருவாவை இந்திய அரசு அளித்திடவேண்டும் எனக் கட்டாயப்படுத்துகிறது.

19. நெடுஞ்சாலைகள் அனைத்திலும் வழிப்பறிக் கொள்ளையர்கள் போல இந்திய அரசு, எடுபிடிகளையும், அடியாட்களையும் வைத்துக் கொண்டு சுங்கச் சாவடிகள் அமைத்து வெகுமக்களிடம் வரிகள் பிடுங்கிக் கொண்டிருப்பதை இம் மாநாடு மிகவும் வன்யைமாகக் கண்டிக்கிறது. ஏற்கனவே வண்டிகள் வாங்கும்போதே சாலை வரிகள் கட்டப்பட்டிருக்கும் நிலையில் சாலை சுங்க வரிகள் என வரிகள் பிடுங்கும் செயல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமாய் இம் மாநாடு வலியுறுத்துகிறது.

20. வேளாண் தொழில் மிகவும் நசுக்கப்பட்டு வரும் சூழலில், வேளாண் இடுபொருள்களுக்கு விலைகளைக் குறைக்க வேண்டும் என்றும், விளைச்சல் பொருள்களுக்கு ஞாயமான வகையில் விலை அளித்துக் கொள்முதல் செய்யவேண்டும் என்றும் இம் மாநாடு வலியுறுத்துவதோடு, அரிசி, கரும்பு உள்ளிட்ட விளைச்சல் பொருள்களுக்கு இந்திய அரசு விலை உறுதிப்பாடு (நிர்ணயம்) செய்யாமல் வேளாண்மைக் குழுக்களே விலை உறுதிப்பாடு (நிர்ணயம்) செய்யும் படியாக இருக்க வேண்டும் என மாநாடு கட்டாயப்படுத்துகிறது.

21. தமிழ்நாட்டில் 28 ஆண்டுகளாகச் சிறையில் அடைபட்டுக் கிடக்கிற பேரறிவாளன், நளினி, இராபர்ட் பயாசு, சாந்தன், முருகன், செயக்குமார், இரவிச் சந்திரன் ஆகிய ஏழு பேரையும் தமிழக அரசின் ஒப்புதலோடு விடுதலை செய்யலாம் என உச்சநெறிமன்றம் தீர்ப்புரைத்த பின்பும், அதைத் தொடர்ந்து தமிழக அமைச்சரவை ஏழு தமிழர் விடுதலைக்கு ஒப்புதல் தந்த பிறகும் எந்த விடையும் சொல்லாமல் தமிழக ஆளுநர் அமைதியாயிருக்கும் நிலையை விடுத்து, அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என இம் மாநாடு வலியுறுத்துகிறது. அவர்களைப் போலவே பல ஆண்டுகளாய்ச் சிறையில் அடைபட் டிருக்கிற இசுலாமிய சிறையாளர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என மாநாடு வலியுறுத்துகிறது.

22. இலங்கையில் தமிழர்கள்மீது நடத்தப்பட்ட இனப்படுகொலைகளுக்கு அனைத்துத் தேச அளவில் ‘சுதந்திர’மான உசாவல் (விசாரணை) தேவை என்பதை இம்மாநாடு வலியுறுத்துவதோடு, தமிழீழ விடுதலைக்கானப் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் இம் மாநாடு வலியுறுத்துகிறது.

23. தமிழக வெகுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துகிற வகையில் தமிழிய உணர்வு சார்ந்த, சாதி

(3ஆம் பக்கம்)

# “காவிக்கு மறுப்பு – பெரியாரின் கறுப்பு”


*திருச்சிப் பேரணி மாநாட்டு நிகழ்விலிருந்து ஒரு தொகுப்பு:*

- இலட்சியத்தில் உறுதி; கட்டுப்பாட்டின் அடையாளமே கருஞ்சட்டை என்பதை நிரூபித்தது பேரணி. காவல் துறைக்கு வேலையே இல்லை; தோழர்களே தங்களை ஒழுங்குப்படுத்திக் கொண்டு கட்டுப்பாட்டுடன் - இளம் பெண்களும் ஆண்களும் பேரணியில் அணி வகுத்தக் காட்சி - எந்த அரசியல் கட்சியிலும் பார்க்க முடியாத ஒன்று.
- மூத்த தலைவர்களான திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் நிறுவனர் வே. ஆனைமுத்து; அடுத்த தலைமுறையைச் சார்ந்த திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தந்தை பெரியார் திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் ஆகியோர் ஒரே மேடையில் அடுத்தடுத்து அமர்ந்திருந்த காட்சி தோழர்களுக்கு பெரும் உற்சாகத்தைத் தந்தது.
- மேடைக்குப் பின் திரையில் ஒளிக் காட்சிகளாக பெரியாரின் வெவ்வேறு நிழல் படங்கள் திரையிடப்பட்டன. உரைகளுக்கு இடையே பெரியாரின் ஒரு நிமிட உரை இரண்டு முறை ஒளி பரப்பப்பட்டது.பெரியார் குரலையும் கருத்தையும் கேட்ட இளைஞர்கள் கூட்டம் உணர்ச்சி மேலிட்டு கைத்தட்டி ஆரவாரம் செய்தது.
- நிகழ்வுகளின் ஒளிப் பதிவுக்கான ஏற்பாடுகளை திரைப்படத் துறையைச் சார்ந்த பெரியாரியல் கலைஞர்கள் ஏற்றுக் கொண்டு மிகச் சிறப்பாக திரையிடலைச் செய்திருந்தனர்.
- பேரணியில் கருஞ்சட்டை அணிந்த இளம் பெண்கள் பறை இசை முழங்கினர். வீர விளையாட்டு நிகழ்ச்சிகளும் இடம் பெற்றிருந்தன. குடும்பம் குடும்பமாக குழந்தைகளுடன் கருஞ்சட்டைத் தோழர்கள் உணர்ச்சி முழக்கமிட்டு வந்தனர்.
- மேடையில் 3 - ஜாதி - சடங்கு மறுப்பு - சுயமரியாதை திருமணங்கள் நடைபெற்றன. இதில் இரண்டு திருமணங்கள் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களின் குடும்பத் திருமணங்கள் என்பதோடு, தலித் சமூகத்தைச் சார்ந்த மணமகனுக்கும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த மணமகளுக்கும் நடந்தவை.

  மதுரை மோசூகுடி சாமிநாதன் - லட்சுமி இணையரின் மகள் வசந்தி; கோத்தகிரி சுந்தரம், யோகேசுவரி மகன் முத்துகுமாருக்கும் (மணமகன் முத்துக்குமார், திருப்பூர் மாநகர திராவிடர் விடுதலைக் கழக அமைப்பாளர்).

  ஈரோடு தெற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் சென்னிமலை செல்வராசு - பழனியம்மாள் இணையரின் மகன் இனியவன் - திருப்பூர் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் முத்துலட்சுமி-ஆண்டவன் இணையரின் மகள் சாரதா ஆகியோருக்கும்;

  மதுரை ஆனந்த ராஜ்-பிரித்தீ ஆகியோருக்கும் மேடையில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி திருமணங்களை நடத்தி வைத்தார். “திருமணத்துக்கு வந்தவர்கள் கட்டாயம் சாப்பிட்டுச் செல்ல வேண்டும்” என்ற திருமண வீட்டார் நிர்ப்பந்தம் இல்லாமல், உணவுச் சுதந்திரத்தை உங்களுக்கு வழங்கக் கூடிய திருமணங்கள் இவை என்று திராவிடர் கழகத் தலைவர் நகைச்சுவையுடன் குறிப்பிட்டபோது கரவொலி செய்து வரவேற்றனர்.
- பண்பாட்டு ஆய்வாளரும் பெரியாரியலாளருமான தொ. பரமசிவம்-சக்கர நாற்காலியில் உடல் நலிவுற்ற நிலையிலும் நிகழ்வில் பங்கேற்றார். “பெரியாரின் கடவுள் - மதம் - ஜாதி - சாஸ்திர எதிர்ப்புகளின் நோக்கம் - அதன் அதிகாரக் கட்டமைப்புகளைத் தகர்ப்பதுதான் என்ற நோக்கில் பெரியாரியலைப் புரிந்து கொள்ள வேண்டும்” என்று குறிப்பிட்டார்.
- ‘பெண் ஏன் அடிமையானாள்’ நூலை ரூ.10/-க்கு மலிவு விலையில் பரப்பி வரும் ‘நன்செய் பதிப்பகம்’ தோழர்கள் 500 பிரதியை விற்று மாநாட்டுக்கு நன்கொடையாகப் பெற்றுக் கொள்ள அனுமதித்தனர். 20 நிமிடங்களில் 500 பிரதியும் விற்றுத் தீர்ந்தன. ரூ.5000 மாநாட்டு நிதியில் சேர்க்கப்பட்டது.
- திருமணங்களையும் பிறகு அதில் ஏற்படும் உறவு சிக்கல்களையும் மய்யமாக வைத்தே தொலைக் காட்சி ‘சீரியல்’களை மாதக் கணக்கில் இழுத்துக் கொண்டே போகும் எங்கள் தொழிலுக்கு இத்தகைய மேடைத் திருமணங்கள் ‘உலை வைத்து விடுகிறதே’ என்று நகைச்சுவையாக்கக் குறிப்பிட்டார் சின்னத் திரை தமிழ்ப் பண்பாட்டு அமைப்பைச் சார்ந்த கவிதா பாரதி. இனி அடுத்த மேடைகளில் இந்த எண்ணிக்கை 3 ஆயிரம் திருமணங்களாக உயர வேண்டும் என்றார்.



- “பார்ப்பனர் என்று கூறாதீர்; ‘பிராமணர்’ என்றே கூறுங்கள்; வீணாக பார்ப்பனரைப் பகைத்துக் கொண்டால் திரைத் துறையில் உங்கள் வளர்ச்சி பாதிக்கும்” என்று பலரும் தன்னிடம் அறிவுரைக் கூறும்போது, அதை மறுத்து பார்ப்பனனை ‘சுவாமிஜி’ என்று அழைத்து, மீண்டும் அடிமைத்தனத்துக்கு இழுத்துச் செல்ல விரும்புகிறீர்களா, என்று தான் பதிலடி தந்ததை சுட்டிக்காட்டிப் பேசினார், இயக்குனர் கோபி நயினார். ஒரு போதும் ‘பிராமணன்’ என்று அழைக்க மாட்டேன்; ‘பார்ப்பனர்’ என்றே அழைப்பேன் என்று கூறிய இயக்குனர், ஜாதி ஒழிப்புக்கு பல்வேறு சமூகங்களுக்கிடையே ஓர்மையும் உரையாடலும் அவசியம் என்று வலியுறுத்தினார்.
- கடும் பொருளாதார நெருக்கடியில் வசதி வாய்ப்புகள் இல்லாத இயக்கங்களால் நடத்தப் பட்டது இந்த மாபெரும் நிகழ்வு. நிதி நெருக்கடியால் கூட்டத்தில் துண்டேந்தி நிதி திரட்டப்பட்டது. மக்கள் அளித்த தொகை ஒரு இலட்சத்து ஓர் ஆயிரத்து 402 ரூபாய் என்று மேடையில் அறிவித்தபோது பலத்த கரவொலி எழும்பியது. வலிமையான கொள்கை வீரர்களின் பாசறையே திரண்டிருந்த கூட்டம் என்பதை இந்த நிதியின் எண்ணிக்கை பறையாற்றியது.
- ‘நிதி திரட்ட - மேடைக்கும் வருவார்கள் என்று எதிர்பார்த்திருந்தேன்; ஆனால் வரவில்லை; எனவே நிகழ்வுக்கு என்னுடைய பங்களிப்பை வழங்குவதாக ஒரு தொகையை இயக்குனர் பழனியப்பன், திருமுருகன் காந்தியிடம் வழங்கினார். தான் தெரிவித்த எந்தக் கருத்தையும் நிர்ப்பந்தத்துக்காக எந்த நிலையிலும் மாற்றிக் கொள்ளாத நேர்மைதான் பெரியாரின் தனிச் சிறப்பு என்று அவர் உரையில் குறிப்பிட்டார்.
- 7 தமிழர் விடுதலை தீர்மானம் மாநாட்டின் முத்தாய்ப்பாக இறுதி தீர்மானமாக படித்தபோது கூட்டமே பலத்த கரவொலியால் அதிர்ந்தது.
- பேரணியில் மக்கள் அதிகாரம் அமைப்பினர், மோடி இந்துத்துவ மக்கள் விரோதக் கொள்கைகளை விளக்கிடும் கலை நிகழ்ச்சிகளை நடத்தி வந்தனர்.
- திருப்பூர் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள், பெரியார் 45ஆவது நினைவு நாளைக் குறிக்கும் வகையில் 45 அடி உயர பெரியார் உருவப் படத்தைப் பேரணியின் முகப்பில் எடுத்து வந்தது அனைவரையும் கவர்ந்தது.
- மே 17 இயக்கத் தோழர்கள் சென்னையிலிருந்து ஏற்பாடு செய்த வாகனங்களுக்கு, கடைசி நேரத்தில் காவல்துறை மிரட்டலால் பெரும் நெருக்கடியைச் சந்தித்தனர். வாகன உரிமையாளர்கள் வர மறுத்த நிலையில் கடைசி நேரத்தில் தனித் தனி மாற்று வாகனங்களை ஏற்பாடு செய்து திருச்சிக்கு திட்டமிட்டபடி வந்து சேர்ந்தனர். இளம் பெண் தோழர்கள் கருஞ்சட்டையுடன் பறை இசை முழக்கி வந்தனர்.
- பேரணியில் திரண்டிருந்த கூட்டத்தினரின் சராசரி வயது 25தான். இவர்கள் பெரியார் மரணத்துக்குப் பிறகு பிறந்த பெரியாரைப் பார்க்காத இளைஞர்கள் என்று கரு.பழனியப்பன் தனது உரையில் சுட்டிக் காட்டினார்.
- 1938 இந்தி எதிர்ப்பு; 1946இல் கருஞ்சட்டைப் படை மாநாட்டுப் பந்தலுக்கு எதிரிகள் தீ வைப்பு; 1951இல் வகுப்புரிமைப் போராட்ட வரலாறு என்று வரலாறுகளை பட்டியலிட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, 1973 டிசம்பர் 19ஆம் தேதி பெரியார் இறுதி உரையில் “தமிழருக்காக நான் பலிகடாவாகிறேன்” என்று பேசியதைக் குறிப்பிட்டு, தமிழரின் விடுதலைக்கு ‘பலிகடா’க்களாக நாம் மாறுவோம் என்று சூளுரைத்தார்.
- மாநாட்டுக்கு எதிரே அமைக்கப்பட்ட முகப்பில் பெரியார் - அம்பேத்கர் - அயோத்திதாசர் - ஏ.டி. பன்னீர்செல்வம் - பிரபாகரன் - திருவள்ளுவர் - காரல் மார்க்ஸ் படங்கள் இடம் பெற்றிருந்தன.
- உரையாளர்களுக்கு பெரியார் படம் பொதிந்த கேடயம் நினைவுப் பரிசுகளாக வழங்கப்பட்டன. மேடை நிகழ்வுகளை தமிழக மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் கே.எம். செரீப் ஒருங்கிணைத்தார்.
- கருஞ்சட்டைப் பேரணியைத் தொடர்ந்து, நீலம், செஞ்சட்டைப் பேரணிகளையும் அடுத்தடுத்து நடத்துவோம் என்ற அறிவிப்பை திருமுருகன் காந்தி வெளியிட்டார்.
- கருப்பு - நீலம் - சிவப்பு என்பதோடு, சூழலியல் அடையாளமாக பச்சை நிறத்தையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும், சமூகநீதிக்குள் ‘சுற்றுச் சூழல் நீதி’யும் அடங்கியிருக்கிறது என்ற வேண்டுகோளையும் முன் வைத்தார், பூவுலகின் நண்பர்கள் அமைப்பைச் சார்ந்த பொறியாளர் சுந்தர்ராஜன்.
- ‘நியூஸ் 18’ தொலைக்காட்சி மட்டும் நிகழ்வுகளை அவ்வப்போது நேரடி ஒளிபரப்பு செய்தது. ‘சன்’, ‘நியூஸ் 7’ தொலைக்காட்சிகள் செய்திகளில் ஒளிபரப்பின. ஏனைய ஏடுகளும் அனைத்து ஊடகங்களும் பேரணி மாநாட்டைக் கட்டுப்பாடாக இருட்டடிப்புச் செய்துவிட்டன.
- பெரியார் நினைவு நாள் பேரணி மற்றும் மாநாட்டுக்கு தடைபோட்ட தமிழக முதல்வரும் அமைச்சர் களும் அடுத்த நாள் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய நகைச்சுவைக் காட்சிகளைத்தமிழ்நாட்டு மக்கள் பார்த்து இரசித்தார்கள்.
- பேரணியிலும் சுவரெழுத்துகளிலும் சொற்றொடர் ஒன்று உயிரோட்டம் பெற்று நின்றது. அது இது தான் - ‘காவிக்கு மறுப்பு - பெரியாரின் கருப்பு’.

**தொகுப்பு : விடுதலை இராசேந்திரன்**

---

*(2ஆம் பக்கத் தொடர்ச்சி)*

சமய மறுப்புணர்வைத் தெளிவுபடுத்துகிற வகையிலான விழாக்களையும், நிகழ்வுகளையும், மூட நம்பிக்கை எதிர்ப்புப் பேரணிகளையும் தமிழகமெங்கும் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் இயக்கங்கள் ஒருங்கிணைந்தோ தனித்தோ முன்னெடுக்க வேண்டும் என இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

24. தமிழக மக்களுக்குப் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பியதையும், சாதி இழிவை ஒழிப்பதையும் தன் வாழ்க்கை நோக்கமாகக் கொண்ட பெரியார், சாதி ஒழிப்புக்காக ஆழ்ந்து சிந்தித்துச் செயலாற்றிய அம்பேத்கர் மற்றும் தமிழிய மக்களிடையே அற உணர்வு பரப்பிய அறிஞர்களும் செயற்பாட்டாளர்களுமான திருவள்ளுவர், வள்ளலார், அயோத்திதாசப் பண்டிதர், மறைமலை யடிகள், தேவநேயப் பாவாணர், பாவேந்தர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் உள்ளிட்டவர்களின் பிறந்த நாள் நிகழ்வுகளைச் சிறப்பாக நடத்துவதோடு, ஆரியப் பார்ப்பனியத்திற்கு எதிராய்ப் பெரியார் முன்னெடுத்து நடத்திய திருக்குறள் மாநாடுகளையும், சாதி ஒழிப்பு மாநாடுகளையும் இப் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு ஒருங்கிணைந்து தொடர்ந்து ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டங்களிலும் நடத்திட வேண்டுமென இம்மாநாடு அனைத்து அமைப்புகளையும் கேட்டுக் கொள்கிறது.

25. பெரியார் தம் இறுதிச் சொற்பொழிவிலே குறிப்பிட்டுக் கேட்டுக் கொண்டபடி, நம் நாடு தமிழ்நாடு என்கிற கொள்கை முடிவில், நம் மீதான சாதி இழிவுகளையும், அரசியல் அதிகாரத்தையும் செய்துவரும் அனைத்து அந்நிய ஆதிக்கர்களையும் தமிழ்நாட்டை விட்டு வெளியேற்றிடும் வகையில் நம் நாடு தமிழ்நாடு என்கிற கொள்கை நோக்கோடு திட்டமிட்ட நீண்டகாலப் பணித்திட்டத்தை இக் கூட்டமைப்பு மேற்கொள்ள வேண்டுமென இம்மாநாடு பெரியாரிய உணர்வுகொண்ட அனைத்து இயக்கங்களையும் கேட்டுக் கொள்கிறது.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# 'பார்ப்பனியமும் இந்தியமும்' தமிழினப் பகை!



*(முதல் பக்கத் தொடர்ச்சி)*

நடக்காது என்றார். ஜாதி வெறி ஒழிக்கப்பட்டு ஜாதியற்ற தமிழர் சமுதாயத்தை உருவாக்கவும் இனி ஜாதி ஆணவப் படுகொலைகளுக்கு தமிழகத்தில் இடமில்லாத நிலையை உருவாக்குவதற்கும் நாம் முன்னுரிமை தந்து செயல்பட வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி நிறுவனரும் பெரியாரிய அமைப்பின் மூத்த தலைவருமான வே. ஆனைமுத்து, 90 அகவையைக் கடந்த நிலையிலும் மாநாட்டில் பங்கேற்றுப் பேசினார். புஷ்யமித்திர சுங்கன் என்ற பார்ப்பன மன்னன், மவுரிய ஆட்சியை ஒழித்து மீண்டும் பார்ப்பனிய அதிகாரத்தை நிலைநாட்டிய வரலாற்றைப் போல் இப்போது டெல்லியில் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனியம் பார்ப்பன அதிகாரத்தை நிலைநாட்டி வருவதை சுட்டிக்காட்டினார். இப்போது டெல்லியில் புஷ்யமித்திரன் வழியில் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனியம் பார்ப்பன அதிகாரத்தை நிலைநாட்டி வருவதை சுட்டிக்காட்டியதோடு, திருச்சி மாநகரில் பெரியார் இயக்கம் நடத்திய வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வுகளை நினைவு கூர்ந்தார்.

தாளாண்மை உழவர் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளரும் பொறியாளருமான கோ. திருநாவுக்கரசு பேசுகையில், விவசாயம் 'சூத்திரர்கள்' தொழிலாக இருப்பதால் பார்ப்பனிய அதிகார ஆட்சி விவசாயத்தை நசுக்குகிறது என்றும், எம்.எஸ். சுவாமிநாதன் போன்ற பார்ப்பனர்கள் - விஞ்ஞானிகள் என்ற போர்வையில் விவசாயம் குறித்த அடிப்படை அறிவே இல்லாமல், விவசாயிகள் வாழ்வை மேலும் நலிவாக்கும் திட்டங்களை முன்மொழிவதையும் சுட்டிக்காட்டிப் பேசினார். தியாகி இம்மானுவேல் பேரவைத் தலைவர் பூ. சந்திரபோசு பேசுகையில், வரலாற்றில் வேத பார்ப்பனியம் புத்தர் காலத்திலிருந்து தன்னை எதிர்த்தவர்களை 'இரத்த பலி'க் கேட்டு ஒழித்திருப்பதை சுட்டிக் காட்டினார்.

தொடர்ந்து, பெரியார் அறிவித்த அரசியல் சட்டத்தின் ஜாதி பாதுகாப்புப் பிரிவுகளை 1957 நவம்பர் 26இல் எரித்து, 18 மாத சிறைத் தண்டனை பெற்ற லால்குடி முத்து செழியன் மாநாட்டின் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்றுப் பேசினார். 88 அகவையை எட்டியிருக்கும் லால்குடி முத்து. செழியன், "ஜாதி ஒழிப்புக்காக சிறை சென்ற எங்களைப் போன்றவர்கள், அந்த லட்சியம் தீவிரமாக முன்னெடுக்காமல் புதைக்கப்பட்டு விடுமோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தபோது இதோ ஆயிரமாயிரம் ஜாதி ஒழிப்பு இளைஞர்கள், அந்த இலட்சியத்துக்காகத் தயாராகி விட்டோம் என்பதை பேரணியும் மாநாடும் உணர்த்தி விட்டது" என்று கூறியபோது, கூட்டம் உணர்ச்சி வயப்பட்டது.

ஜாதி ஒழிப்பு வீரரின் கருத்தைக் கூட்டம் ஏற்கிறது என்பதன் அடையாளமாக கூட்டத்தினர் அனைவரும் எழுந்து நின்று கரவொலி எழுப்பினர்.

தொடர்ந்து மாநாட்டு மேடையில் மூன்று ஜாதி மறுப்பு இணையரின் திருமணங்களை திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, பல்லாயிரக்கணக்கில் திரண்டிருந்த கருஞ்சட்டைக் குடும்பங்களுக்கிடையே பலத்த கரவொலி - வாழ்த்து முழக்கங்களுக்கிடையே நடத்தி வைத்தார். தொடர்ந்து பேராசிரியர் சுரசுவதி, தமிழ்ச் சொல்லாய்வு அறிஞர் பா. அருளி, முனைவர் நெடுஞ்செழியன், இயக்குனர் கோபி நயினார், பொருளியல் அறிஞர் ஜெயரஞ்சன், முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி அரி. பரந்தாமன், தமிழர் விடியல் கட்சித் தலைவர் மா. டைசன், ஆதித் தமிழர் பேரவை நிறுவனர் அதியமான், திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், பூவுலகின் நண்பர்கள் அமைப்பைச் சார்ந்த பொறியாளர் சுந்தர் ராஜன், டிசம்பர் 3 அமைப்பைச் சார்ந்த தீபக், புதிய குரல் அமைப்பைச் சார்ந்த ஓவியா, எழுத்தாளர் பாமரன், இயக்குனர் கரு. பழனியப்பன், காஞ்சி அமுதன், தமிழ்த் தேச மக்கள் முன்னணி மீ.த. பாண்டியன், தமிழக மக்கள் ஜனநாயகக் கட்சித் தலைவர் கே.எம். செரீப், பண்பாட்டு ஆய்வாளர் தொ. பரமசிவம், திராவிடர் தமிழர் கட்சியின் தலைவர் வெண்மணி, மக்கள் விடுதலைக் கட்சித் தலைவர் முருகவேல் ராசன், மக்கள் அரசு கட்சித் தலைவர் வழக்கறிஞர் ரஜினிகாந்த், கீற்று ரமேஷ், சின்னத் திரை தமிழ்ப் பண்பாட்டு அமைப்பைச் சார்ந்த கவிதா பாதி, ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் தலைவர் பார்த்திபன் ஆகியோர் சுருக்கமாக உரையாற்றினர். சரியாக 10 மணிக்கு நிகழ்ச்சி நிறைவடைந்தது.

**– நமது செய்தியாளர்**

## 'பெண் ஏன் அடிமையானாள்' நூலுக்கு மட்டும் புத்தகக் கண்காட்சியில் தனி அரங்கு

'பெண் ஏன் அடிமையானாள்' நூலை ரூ.10க்கு மலிவு பதிப்பாக்கி இலட்சக்கணக்கில் விற்பனை இயக்கம் நடத்தி வரும் நன்செய் பதிப்பகத் தோழர்கள் சென்னை புத்தகக் கண்காட்சியில் இந்த நூலுக்கு மட்டுமே தனி விற்பனை அரங்கு எடுத்துள்ளனர். இலட்சங்களையும் தாண்டி பிரதிகள் வேகமாக விற்பனையாகி வருகின்றன. அரங்கின் எண். 543

வாசகர்களுக்கு : பெரியார் சந்தித்த அடக்குமுறை – தொடர் இந்த இதழில் இடம் பெறவில்லை. அடுத்த இதழில் தொடரும்.

# யாவையும் நிறுத்திக் கொள் காவியே!

வெறிமிகு வேகத்தில் பயணிக்காத வாகனங்கள்.

தனிமனிதத் துதியும், வெறுப்புமற்ற ,
சமுகநீதி வேண்டித் தாகமுடன் களம்காணும்
வேட்கை பொதிந்தப் பயணம் !

மகிழுந்தும், பெருவாகனமும்...

தும்பை வெள்ளையும்... பட்டை மோதிரமும்...
அத்தர் நெடியும்... பட்டைச் சங்கிலி சகிதம்
மதுக்கடையை மொய்க்காதக் கூட்டம்.!

நோட்டுகளை எண்ணுகிறதும்,
எண்ணுகிற நோட்டுக்காய் எச்சில் விழுங்கிக்
கையேந்தாதக் கரங்கள்.!

மனமெல்லாம் தாடிக்கிழவனை நிரப்பி...
பசியென்னும் உணர்வையே பறையிசையில் நிறைத்து...
நரம்பு நாணை சுயமரியாதைப் பாட்டால்
மீட்டும் கூட்டம்!

எம் கரமேந்தும் கருங்கொடி ...
சூரியனையும் மிஞ்சும் சுடரொளி!

எங்கள் கருந்தேகத்தைக் கிழித்திட்டால்
சிவப்பு நட்சத்திரமாய் மினுங்கும் புது ஒளி!

வரலாறைச் சுமந்த மூளை.
அடக்குமுறை எதிர்க்கும் தேகம்.
சமூகநீதிக்காய் நடந்து...
நடந்து உரமேறியக் கால்கள்.
தீமைக்கெதிரான சொற்கள்.
தீர்வு கிட்டும்வரை துஞ்சாதக் கண்கள்.



இவையே எங்கள் அடையாளம்.

போதையின் ஆக்கத்தால் ஆட்டமோ..

மாநாடுத் திடலில் குழாய்
விளக்குடைக்கும் நாட்டமோயின்றி...

அரைக்கல் அளவே இடமாயினும்...
நெஞ்சுநிமிர்த்தி அமர்ந்து...
பகலவனின் சித்தாந்தத்தை பகலிரவு
பாராது கேட்கும் காதுகள்.

இதுவே எங்கள் வளர்ப்பு!
பெரியாரியம் ஒன்றே எங்கள் உவப்பு..!

நான்குமுறை உலகம் சுற்றினதற்கு ஒப்பாம்....
எங்கள் அறிவாசானின் பயணங்கள்.!

அவனின் வார்ப்பு நாங்கள் சோடைபோவோமா?
இவ் வாய்ப்பிற்குத்தானேக் காத்திருந்தோம்.!

இக் காரியத்திற்குத்தானே துடித்திருந்தோம்.!

ஆயிரமாண்டுகள் ஆரியம் கொண்டாடிய
திருச்சிற்றம்பலத்தை

ஒரே நாளில் கருஞ்சிற்றம்பலமாய் மாற்றினோமே!

ஆயிரமாயிரம் ஆண்டுகள் பீடித்த பீடை
ஆரியத்தை அரை நூற்றாண்டில் உதைத்து
உடைத்த கலகக்காரனின் பிள்ளைகளல்லவா நாங்கள்.

அந்தத் திமிர் இன்னும் ஆயிரமாண்டுகள்
கடந்தாலும் குன்றாதே!

ஆதி நிறம் கருப்பு

அண்டி வந்தவனின் நிறமே காவியென மௌனமாய்
ஒரு யுத்தத்தில் தெளிய வைத்தோமே!

வைத்த முழக்கத்தில் வைதீக பூச்செல்லாம் உதிர்ந்தது.
கூடிய கூட்டத்தின் பிரதிபலிப்பு

கருமையடைந்த ஆரியத்தின் முகத்தில் தெரிந்தது.

யாவையும் நிறுத்திக்கொள் காவியே இது எச்சரிக்கை!

நாங்கள் திருச்சியில் வாசித்தது பெரும் நூலல்ல...
சிறு துண்டறிக்கை !

**– பெ. கிருஷ்ணமூர்த்தி**

**(திருச்சி கருஞ்சட்டைப் பேரணி – மாநாடு குறித்த உணர்வில் ஈரோடு கழகத் தோழர் படைத்த உணர்ச்சி வரிகள்)**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 28th December 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN